பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
04 09 2025 12 40
வியாழக்கிழமை பிற்பகல்

<u>**தலைப்புச் செய்திகள்**</u>

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் சிங்கப்பூர் பிரதமர் திரு. Lawrence Wong-ஐ சந்தித்து இருதரப்பு ஒத்துழைப்புகள் குறித்து பேச்சு நடத்தி வருகிறார்.

2. 36 வகையான உயிர்காக்கும் மருந்துப் பொருட்களுக்கு ஜி.எஸ்.டி.யில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் என்று மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா கூறியுள்ளார்.

3. பஞ்சாபில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் ஆய்வு செய்து வருகிறார்.

4. உயர்கல்வி நிறுவனங்களுக்கான தேசிய தரவரிசைப் பட்டியலில் சென்னை ஐ.ஐ.டி. தொடர்ந்து 7வது ஆண்டாக முதலிடம் பெற்றுள்ளது.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemanth காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி புதுதில்லியில் சிங்கப்பூர் பிரதமர் திரு. Lawrence Wong-ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

ஹைதராபாத் இல்லத்தில் நடைபெற்று வரும் இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் இரு தலைவர்களும் கூட்டாக செய்தியாளர்களை சந்திக்க உள்ளனர்.

முன்னதாக சிங்கப்பூர் பிரதமர் திரு. Lawrence Wong-ஐ வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதுகுறித்து திரு. ஜெய்சங்கர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்தியா-சிங்கப்பூர் இடையிலான நட்புறவை வலுப்படுத்த திரு. Lawrence Wong தொடர்ந்து ஊக்கமளித்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

*சரக்கு மற்றும் சேவை வரியில் இருந்து புற்றுநோய் உள்ளிட்ட 36 வகையான உயிர்காக்கும் மருந்துப் பொருட்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டிருப்பது ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த வரி குறைப்பு நடவடிக்கை அனைவருக்கும் தரமான மருத்துவ சிகிச்சை என்ற மத்திய அரசின் உறுதிப்பாட்டை எடுத்துரைப்பதாக கூறியுள்ளார்.*

*புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், சூரியசக்தி, காற்றாலை மின் உற்பத்தி சாதனங்களுக்கான வரி, 12 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டிருப்பது, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க வகை செய்யும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

*இந்த வரி குறைப்பு, பசுமை வேலைவாய்ப்புகளை உருவாக்கவும், பருவநிலை மாற்றம் தொடர்பான இலக்குகளை அடையவும் வழிவகுப்பதோடு விவசாயிகளுக்கும் பேருதவியாக இருக்கும் என்று திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.*

*இந்த சீர்திருத்தத்தின் மூலம் ஆயுள் காப்பீடு மற்றும் மருத்துவக் காப்பீடு சேவைகளுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதற்கு தமிழக நிதியமைச்சர் திரு. தங்கம் தென்னரசு வரவேற்பு தெரிவித்துள்ளார்.*

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் வரலாற்றுச் சிறப்பு மிக்க புரட்சிகரமான நடவடிக்கை என்று அகில இந்திய வணிகர்கள் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு. பிரவீன் கந்தேல்வால் கூறியுள்ளார்.*

*இந்த சீர்திருத்தம் மூலம் மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் 400க்கும் அதிகமான பொருட்களின் வரி குறைக்கப்பட்டிருப்பது அவர்களது தினசரி செலவுகளை குறைக்க உதவும் என்றும் திரு. பிரவீன் கந்தேல்வால் குறிப்பிட்டுள்ளார்.*

*வேளாண் சாதனங்களுக்கான வரி குறைக்கப்பட்டிருப்பது தங்களுக்கு பேருதவியாய் இருக்கும் என்று தமிழகத்தின் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயி தெரிவிக்கிறார்.*

*(Voice Byte - Farmer Mari - 34 Sec)*

கைத்தறித் துறைக்கு அளிக்கப்பட்டுள்ள வரிச் சலுகைகள் நெசவாளர்களுக்கு ஊக்கமளிக்கும் என்று ஈரோட்டைச் சேர்ந்த தமிழ்நாடு நெசவாளர் சங்க அமைப்பாளர் திரு. கந்தவேல் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜி.எஸ்.டி. வரி விகிதங்களில் மேற்கொள்ளப்பட்ட மாற்றம் கார□ மாக பங்குச்சந்தை இன்று ஏற்றத்துடன் கா□ ப்பட்டது.

மும்பை பங்குச்சந்தையில் சென்செக்ஸ் 554 புள்ளிகளும், தேசியப் பங்குச்சந்தையில் நிஃப்டி 100 புள்ளிகளும் அதிகரித்து வர்த்தகமானது.

<<<<>>>>

பஞ்சாபில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் ஆய்வு செய்து வருகிறார்.

முன்னதாக அம்மாநில ஆளுநர் திரு. குலாப்சந்த் கட்டாரியா, வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட அமிர்தசரஸ், குர்தாஸ்பூர், பதான்கோட், தரன்தரன் மற்றும் ஃபெரோஸ்பூர் மாவட்டங்களில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த அறிக்கையை மத்திய அமைச்சர் திரு. சௌஹானிடம் வழங்கினார்.

இந்நிலையில் மத்திய இணை□ யமைச்சர் திரு. ஜிதேந்திர சிங், ஜம்மு-கஷ்மீரின் உதம்பூர், தோடா, கிஸ்துவார் உள்ளிட்ட மாவட்டங்களின் வெள்ள நிலவரம் மற்றும் நிவார□ ப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சியர்களிடம் கேட்டறிந்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உ□ வு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவதாகவும், சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

இதனிடையே ஜம்மு-கஷ்மீரில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழுவினர் இன்று ஆய்வு செய்கின்றனர்.

தேசிய பேரிடர் மேலாண்மை ஆணை□ யத்தின் ஆலோசகர் கர்னல் கே.பி. சிங் தலைமையில் சாலைப் போக்குவரத்து, வேளாண்மை, ஊரக வளர்ச்சி, ஜல்சக்தி மற்றும் நிதியமைச்சகத்தைச்

சேர்ந்த அதிகாரிகள் அடங்கிய 7 உறுப்பினர் குழு ஜம்மு பிராந்தியத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட உள்ளனர்.

இக்குழுவினர் சமர்ப்பிக்கும் ஆய்வறிக்கையின் அடிப்படையில் மத்திய அரசின் நிதியுதவி அறிவிக்கப்படும்.

<<<<>>>>

நாட்டில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைப் பட்டியலில் ஒட்டுமொத்த பிரிவில் சென்னை ஐ.ஐ.டி. 7வது ஆண்டாக தொடர்ந்து முதலிடம் பெற்றுள்ளது.

புதுதில்லியில் மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வெளியிட்ட இந்த தரவரிசைப் பட்டியலின்படி பல்கலைக்கழகங்களுக்கான பிரிவில் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகம் முதல் இடம் பெற்றுள்ளது.

இந்தப் பிரிவில் தமிழகத்தின் கோவையைச் சேர்ந்த அம்ரிதா விஷ்வ வித்யா பீடம் 8வது இடத்தைப் பிடித்துள்ளது.

மேலாண்மைக் கல்வி நிறுவனங்களுக்கான பிரிவில் அகமதாபாத் ஐ.ஐ.எம். முதலிடம் பெற்றுள்ளது.

மருந்தியல் பிரிவில் உதகையில் உள்ள JSS மருந்தியல் கல்லூரி நான்காம் இடத்தையும், சென்னை SRM அறிவியல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் 10ஆம் இடத்தையும் பிடித்துள்ளன.

கல்லூரிகள் பிரிவில் கோவை PSGR கிருஷ்□ ம்மாள் மகளிர் கல்லூரி 9வது இடத்தையும், PSG கலைக் கல்லூரி 10ஆம் இடத்தையும் பெற்றுள்ளன.

மருத்துவக் கல்லூரிகள் பிரிவில் தில்லி எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி முதலிடத்தையும், வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மூன்றாம் இடத்தையும், புதுச்சேரி ஜிப்மர் நான்காம் இடத்தையும் பிடித்துள்ளன.

<<<<>>>>

பிரதமரின் தாயாரை அவதூறாக விமர்சித்ததைக் கண்டித்து தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகள் விடுத்த அழைப்பின்பேரில் பீஹாரில் இன்று முழு அடைப்பு நடைபெற்று வருகிறது.

தர்பங்காவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் மற்றும் ராஷ்ட்ரிய ஜனதாதள கட்சியினர் தெரிவித்த கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த முழு அடைப்பு நடைபெற்று வருகிறது.

பிஜேபி மற்றும் ஐக்கிய ஜனதாதள கட்சியினர் ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த முழு அடைப்பு கார□ மாக அம்மாநிலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநிலம் Palamu பகுதியில் நக்சலைட்டுகளுடன் நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சண்டையில் காவல்துறையினர் இருவர் உயிரிழந்தனர்.

TSPC அமைப்பைச் சேர்ந்த முக்கிய நிர்வாகியான சசிகாந்த் கஞ்ஜு Kedal வனப் பகுதியில் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி Reeshma Ramesan தெரிவித்துள்ளார்.

இந்த சண்டையின்போது காயமடைந்த 3 காவலர்களில் 2 பேர் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலவி வந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வலுவிழந்துள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மகாராஷ்டிராவின் ஒருசில பகுதிகளில் இன்று அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும், மத்தியப்பிரதேசம், சத்தீஸ்கட், கர்நாடகாவின் ஒருசில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சீன மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanya Hemanth காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

*Baoji*-யில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-12, 21-18 என்ற செட் க□ க்கில் சீன தைபேயின் *Huang Yu Wei*-ஐ வென்றார்.

--------------

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Madhurima Sawant* - ஸ்பெயினின் *Didi Bredberg* இணை□ காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இரட்டையர் பிரிவு முதலாவது சுற்று ஆட்டத்தில் இந்த இணை□ 6-2, 6-1 என்ற செட் கணக்கில் ஆஸ்திரேலியாவின் *Shanelle* - ஸ்பெயினின் *Patricia* இணை□ யை வென்றது.

-------------

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வல் தேவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

<<<<>>>>